விட்டு, நல்ல முடிவு காண்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் — நான் சொன்ன வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை இந்த அவையின் மூலமாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய ரமணி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல மேடைகளிலே அவர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் சில நேரங்களிலே சொற்பொழிவாளர்கள் வேகமாகப் பேசுவது உண்டு; ஆவேசமாகப் பேசுவது உண்டு; அது மேடை அலங்காரத்திற்காக அல்லது அவர்களுடைய கட்சியை சேர்ந்த தொண்டர்கள் இருந்தால் அவர்களை மகிழ்ச்சி அடையச் செய்வதற்காகப் பேசுவது உண்டு. ஆனால் இது அப்படி அல்ல; அந்தப் பேச்சு உடனடியாக செயல்படுத்தப்படுகின்ற பேச்சாக இருக்கின்ற காரணத்தால் அந்த வன்முறைகளை இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது; சட்டப்படி எல்லா நடவடிக்கைகளையும் எடுங்கள் என்று அதிகாரிகளுக்கு அரசு ஆணையிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) தேசிய மீனவர் பேரவையினர் கன்னியாகுமரியில் பேரணி நடத்தியபோது ஏற்பட்ட கலவரத்தினால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் தினமாகிய நேற்று கன்னியாகுமரியிலே ஒரு துப்பாக்கிச் சூடு நடைபெற்று இருக்கிறது. தேசிய மீனவர் பேரணிக்காகச் சென்ற மீனவர்களுக்கும், அங்கு இருக்கக் கூடிய மீனவர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட சில தகராறுகளின் காரணமாகவோ அல்லது அங்கு இருக்கக் கூடிய இடிந்தகரை, கூத்தங்குளி ஆகிய இரண்டு மீனவ கிராமமக்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினை குறித்தோ எழுந்த தகராறில் மிகப் பெரிய கலவரம் மூண்டு அந்த கலவரத்தின் அடிப்படையில் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி இருக்கின்றார்கள். அந்த துப்பாக்கிச் சூட்டில் ஏறத்தாழ 10 பேர் காயமடைந்து இருப்பதாகவும், சில பேருடைய நிலைமை கவலைக்கு இடமாக உள்ளது என்றும் தகவல் வந்து இருக்கிறது. அந்தப் பேரணி பற்றி செய்தி சேகரிப்பதற்காகச் சென்ற இந்து பத்திரிகையின் நிருபர் வாஸ் மாத்யூ என்பவரும், ஜூனியர் விகடன் பத்திரிகையைச் சேர்ந்த அருள் செழியன் என்கிற நிருபரும் தாக்கப்பட்டு அவர்களும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருப்பதாக செய்திகள் வந்து இருக்கிறது. இது குறித்து அரசாங்கத்தின் சார்பில் அதனுடைய கருத்தையும், இந்த நிலைமையையும் விளக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் முதலமைச்சரைக் கேட்டு அமைகிறேன்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, இன்று காலையிலே இந்தத் தகவல் வந்த உடனேயே தங்களுடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்தோம். தேசிய மீனவர்

[திரு. குமரி அனந்தன்] [1989 மே 2

பேரணி என்று கல்கத்தாவிலிருந்து ஒன்றும், மகாராஷ்டிரத்திலிருந்து ஒன்றுமாக வந்தவர்கள் காந்தி நினைவு மண்டபம் வரை அமைதியாகவே சென்று இருக்கிறார்கள் பத்திரிகைச் செய்திப் படி. பிறகு அவர்கள் மீண்டும் வருகிற நேரத்திலே தான் அந்தத் தகராறு என்று சொல்லுகிறார்கள். காயம் பட்டவர்களைப் பார்த்தால் எல்லாம் உள்ளூர் வாசிகளாகவே இருக்கிறார்கள். வெளியூரிலே இருந்து வந்தவர்கள் ஊர்வலத்தை நடத்துகின்ற போது உள்ளூர் வாசிகள் மட்டுமே காயப்பட்டது போன்று தகவல் வந்து இருக்கிறது. அதன் பிறகு துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பொன். விஜயராகவன் சொன்னதைப் போல, இங்கே இந்து பத்திரிகையின் செய்தியாளரும், ஜூனியர் விகடன் செய்தியாளரும் கூட அதிலே பாதிக்கப்பட்டு இருக்கிற செய்தி இருக்கிறது. நீரைக் காப்போம்; உயிரைக் காப்போம் என்று வந்த அந்த ஊர்வலம் மற்ற ஜீவசந்துக்களோடு சமாதானமாக வாழ வேண்டுமென்று வந்த ஊர்வலத்திலே, மனிதனுக்கு மனிதனே சண்டை வருகின்ற ஒரு சூழ்நிலை ஏன் வந்தது? அதனாலே மீனவர்களை துப்பாக்கியாலே சுடுகின்ற சூழ்நிலை ஏன் வந்தது? எனவே அந்தப் பகுதியில் இருக்கின்ற பதட்ட நிலையைப் போக்குவதற்கு என்னென்ன நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது என்பதை நானும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சமுதாய சமத்துவம் என்ற தலைப்பிலே ஒரு ஊர்வலம் கன்னியாகுமரியிலே நடைபெற்று இருக்கின்றது. அந்த ஊர்வலத்தில் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்த பலர் கலந்து கொண்டிருக்கிறார்கள். பெரும் பகுதியினர் மீனவப் பெருங்குடி மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் கூறியதைப் போலவும், மாண்புமிகு உறுப்பினர் பொன். விஜயராகவன் அவர்கள் கூறியதைப் போலவும் ஊர்வலத்திலே வந்தவர்கள், திரும்பிச் சென்றவர்கள், அவர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறோ, அது உள்ளூர், வெளியூர் தகராறோ அல்லது வேறு எந்தத் தகராறோ, அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட தகராறு. இன்னும் சொல்லப்போனால் எனக்கு வந்த தகவல் படி திட்டமிட்டு நடைபெற்ற தகராறு கூட அல்ல; ஏதோ ஒரு அசம்பாவிதமாக, தற்செயலாக நடைபெற்ற தகராறு; ஒருவர் காலை ஒருவர் மிதித்து விட்டு ஊர்வலத்திலே செல்லும் போது இப்படி மிக சொற்பமான, அற்பமான காரணங்களுக்காக அந்தத் தகராறு மூண்டு, அதன் காரணமாக எழுந்த அடிதடி தகராறு முற்றிய இடம் போலீஸ் ஸ்டேஷன் வாசலாக இருக்கவே, போலீஸ் ஸ்டேஷன் வாசலிலே இருந்தவர்கள் ஸ்டேஷன் மீது தாக்குதல் நடத்தவும், போலீஸ் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தவுமான சம்பவம் நடைபெற்று இருக்கிறது.

(முற்பகல் 10-20)

அங்கேயிருந்த நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பத்து, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இரண்டு, மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து

கள் உள்பட மொத்தத்திலே பதினெட்டு பேருந்துகள் சேதமடைந்தன. சேதமடைந்த மொத்த சொத்தின் மதிப்பு இருபதாயிரம் ரூபாய் இருக்குமென்று கூறப்படுகிறது. அங்கே இந்தத் தாக்குதலுக்குப் பெண்களும் விடு டவில்லை. அவர்களும் அந்தத் தாக்குதலுக்கு அங்கே ஆளாகி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு நிலைமை கட்டுக்கு அடங்காமல் போன சூழ்நிலையில் அங்கிருந்த போலீசார் பக்ஷாட் என்கிற அந்தத் துப்பாக்கி பிரயோகத்தை நடத்த வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் போலீசார் சொல்கின்றார்கள்.

இப்பொழுது நிலைமை அங்கே கட்டுக்கு அடங்கியிருந்தாலும் கூட, அதிலே எனக்கு உள்ள வருத்தம், அங்கே ஒரு பத்தாயிரம் பேர் திரண்டு ஊர்வலம் வருகிறார்கள் என்கிறபொழுது அந்த இடத்திற்கு எஸ்.பி. நிச்சயமாக ஆரம்பத்திலேயே சென்றிருக்க வேண்டும். அதற்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரியாவது அங்கே சென்றிருக்க வேண்டும். அவர்கள் ஏன் சென்று, முன்கூட்டியே முன் ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்பதற்காக அவர்களிடத்திலே விளக்கம் கேட்குமாறு நான் அரசுத் துறையின் மூலமாகக் கூறியிருக்கிறேன்.

எனினும் இப்பொழுது அங்கு எந்தப் பதட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் பேச்சு வார்த்தை குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் ஒரு தெளிவான தகவலைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னாலே இங்கே இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசிய நேரத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கட் கூட அன்றைக்கு இந்த இலங்கை அரசிடம் விடுதலைப் போராளிகள் பேச்சு வார்த்தை பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஆனால், இன்றைய தினம் அது வேறுவிதமாகத் திரும்பி, இன்றைக்குத் தமிழ் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்ற அளவிற்கு விடுதலைப் போராளிகள் டிமான்ட் வைப்பதாகவும், எனவே, நம்முடைய இந்திய அரசாங்கம், படைகளை வாபஸ் வாங்க மாட்டோம் என்று சொல்லுகின்ற அளவிற்கு ஒரு மோசமான சூழ்நிலை, ஒரு சுமுகமான சூழ்நிலை இல்லாத நிலை இன்றைக்கு இலங்கையிலே ஏற்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தெரிந்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிப்பதற்கு மத்திய அரசாங்கத்திடமோ அல்லது விடுதலைப் புலிகளிடமோ பேசுவது போன்ற முயற்சிகளை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.